**வ.த.மை 2020-21 ஒலியும் ஒளியும் (VTA 2020-21 Music Showcase)**

நம் பள்ளி குழந்தைகளின் பாட்டு மற்றும் இசைக்கருவி வாசிக்கும் திறனை வெளிப்படுத்த ஒரு தளத்தை இணையவழி மூலம் "ஒலியும் ஒளியும்" விருந்தாக படைக்க உங்கள் குழந்தைகளின் காணொளிகளை வரவேற்கிறோம். பாரதியார்/பாரதிதாசன், நாட்டுப்புற பாடல்கள், கும்மி பாடல்கள் என நம் தமிழ் பண்பாட்டை வலியுறுத்தும் பாடல்களை பாட குழந்தைகளை ஊக்கமளியுங்கள்.

இந்த நிகழ்ச்சியில் அனைத்து நிலை குழந்தைகளும் பங்கேற்கலாம்.

## வரைமுறைகள்:

1. உங்கள் பாடலை வாய்ப்பாட்டாகவோ அல்லது இசைக்கருவி வாசித்தோ அனுப்பலாம்.

2. **உங்கள் பாடலை தனியாகவோ, அல்லது பிறருடன் இணைந்து குழுப்பாடலாகவோ சமர்ப்பிக்கலாம்.** குரல் மற்றும் இசைக்கருவிகள் கொண்டு ஒரு band வடிவிலும் சமர்ப்பிக்கலாம்.

3. முடிந்த வரை மத சார்பற்ற பாடல்களை தேர்வு செய்யவும்.

4. உங்கள் விருப்பமான பாடலை கூகிள் படிவத்தின் மூலம் கலைக்குழுவின் ஒப்புதலிற்காக சமர்ப்பிக்கலாம். **உங்கள் விருப்பப்பாடலை சமர்ப்பிக்க கடைசி நாள் பிப்ரவரி 21, 2021. கால தாமதமாக சமர்ப்பிக்கப்படும் பாடல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

5. **உங்கள் பாடல் தேர்வுக்கு கலைக்குழு ஒப்புக்கொண்டால் மின்னஞ்சல் அனுப்பப்படும். அந்த மின்னஞ்சலில் உங்கள் பாடலை பதிவேற்றுவதற்கான இணைப்பு வழங்கப்படும்.** பாடல் வரிகள் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்புடையதாக இல்லையென்றால், கலைக்குழு அந்த பாடலை மாற்றக்கோரும்.

6. ஒப்புதல் பெற்றபின், பாடலை ஒரு முறை மாற்றலாம். எனினும் இறுதி தேதியில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது.

7. **ஒப்புதல் பெற்ற பாடலை நிகழ்ச்சிக்கு காணொளி வடிவத்தில் (.mp4, .mov) சமர்ப்பிக்க கடைசி தேதி பிப்ரவரி 28, 2021. குழந்தை ஒலி வடிவில்**

**மட்டுமே பங்கேற்றாலும், அதை ஒரு காணொளி வடிவில் தான் தயார் செய்து அனுப்பவேண்டும் (தமிழ்க் கண்காட்சியில் செய்தது போல).**

8. **நிகழ்ச்சிக்கு தேர்வு செய்யும் பாடல் தமிழில் இருத்தல் அவசியம். நீங்கள் இசைக்கருவி மட்டுமே வாசித்தால், முடிந்த வரை தமிழ் பாடல்களை தேர்ந்தெடுக்கவும்.**
9. **ஒவ்வொரு பாட்டுக்கும் 4 நிமிடம் வரை அனுமதிக்கப்படும்**. மேலே 1 நிமிடம் உபரியாக வழங்கப்படும்.
10. பாடலில் வரும் வார்த்தைகள் குழந்தைகளுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.
11. நீங்கள் பாடும்போது, தேவை இருந்தால் karaoke அல்லது ஸ்ருதி பெட்டி உபயோகிக்கலாம்.